# புரிந்த புரியாத புதிர்



www.newwisdomministries.com

ஞா
ன
ஒ
லி



ஞானம் 6 - ஒலி 49 - 17.12.2023

# கற்றது கடுகளவுகூட இல்லை





**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கினிய ஞான ஒலி வாசகப் பெருமக்களே, நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வணக்கங்கள்.

கர்வம் தலைக்கேறினால், தானே கடவுள் என்ற மமதை அவரில் குடியேறிவிடும். கர்வத்தினால் காணாமல் போனவர்கள் அதிகம் என்று வரலாறு சான்று கூறுகின்றது. அடுத்தவனைவிட நான் மேல் என்ற சனாதன எண்ணமே கர்வத்தின் அடையாளம்தான். ஒரு இனத்தில் ஒருவன் அதிகம் படித்துவிட்டால், வசதியில் வளர்ந்துவிட்டால், அதிகாரமிக்கவனாக மாறிவிட்டால், அவன் அந்த இனத்தின் கடவுளாகத் தன்னை நினைத்துக்கொள்வான். அனைவரும் அவனையேச் சார்ந்திருக்க வேண்டும் என்று நினைப்பான்.

அடக்கம் அமரருள் வைக்கும். அனைத்தும் அவனை வந்தடையும். அதிகாரத்தின்மீது பற்று இல்லாதவனே, மக்கள் தலைவனாக தகுதியானவன் என்று சொல்வார்கள்.

கப்பலின் கேப்டனாக இல்லையே என்று பொறுமுகிறவன், அந்தக் கப்பலையே மூழ்கடிததுவிடுவான் என்று சொல்வார்கள்.

அத்தகைய தான் என்ற மமதை உள்ளவர்கள். எப்போதும் விதாண்டவாதம் செய்வார்கள். எப்போதும், எந்த இடத்திலும், மக்களின் கவனத்தை ஈர்க்க அசாதாரண, இடைஞ்சல்களைச் செய்து கொண்டே இருப்பான்.

கல்யாண வீட்டில் அவனே மாப்பிள்ளையாக இருக்க ஆசைப்படுவான். சாவு வீட்டிற்குச் சென்றாலும், துக்கவீடு என்றுகூட பாராமல், அனைவரின் கவனமும் தன்மீதுபடும்படி அழிச்சாட்டியம் பண்ணுவான்.

அப்படிப்பட்ட ஒருவன் தான் எல்லாம் தெரிந்தவன் என்று காண்பிக்க, அந்த ஊரில் இருந்த ஒரு துறவியிடம் சென்றான். அவன் அங்கு போனபோது அந்தத் துறவி அமைதியாக தியானத்தில் இருந்தார், அவர் தியானத்தை முடிக்கின்றவரை அமைதியாக ஓர் ஓரமாய் அமர்ந்திருந்தான்.

அந்தத் துறவி வெகுநேரம் தன்னை மறந்த நிலையில் செபிப்பதைப் பொறுக்காமல், அவன் சத்தமாக அவரைக் கூப்பிட்டான். பலமுறை அவன் சத்தமாகக் கூப்பிட்டபிறகு, அவர் அமைதியாகக் கண்களைத் திறந்து, அவனைப் பார்த்து, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன், உங்களிடம் நான் ஒரு பெரிய

சந்தேகத்தைக் கேட்க வந்திருக்கின்றேன். அந்த சந்தேகத்தை யாராலும் தீர்க்க முடியவில்லை, நீங்களாவது அதற்கு சரியான பதிலைக் கூறுவீர்கள் என்றுதான் உங்களைக் கேட்க வந்திருக்கின்றேன் என்றான். அவர் உன் சந்தேகம் என்ன என்று கேட்டார்.

அவன், மேட்சம், நரகம், மறுஜென்மம் என்று எதுவும் இல்லை.அதனால் கடவுள் என்று ஒன்று இல்லை. கடவுள் உண்மையிலேயே இருக்கிறாரா? என்று கேட்டான்.

அவர் அமைதியாக அவனை சிறுதிநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவனிடம் கர்வம் மட்டுமே மேலோங்கியிருந்தது. தனது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்கான எந்த ஆர்வமும் முகாந்திரமும் இல்லை என்றே தோன்றியது.

யாராக இருந்தாலும், அவர்களையும மதித்து உண்மையை நோக்கி அழைத்துச் செல்வதே ஒரு ஞானியின் பணி என்பதை உணர்ந்தவராய்.

அவனிடம், நான் ஒரு சிறு கேள்வியை உன்னிடம் கேட்கிறேன். அதற்குப் பதில் கூறுவாயா? என்று கேட்டார். அவன், அப்படி என்ன கேள்வி கேட்கப்போகிறீர்கள்? நான் உயர் கல்வியெல்லாம் படித்திருக்கின்றேன் என்று சொன்னான்.

அவர், மாடு, ஆடு, குதிரை மூன்றுமே பச்சைப் புல்லை சாப்பிடுகின்றன. ஆனால், அவன்றின் எச்சம் மூன்றுவிதமாக வேறுவேறு வடிவங்களில் இருக்கின்றனவே அது எப்படி. மாடு சாணியாய் உள்ளது...ஆட்டுப் புழுக்கை சின்னசின்னதாய் உள்ளது, குதிரையின் சாணம் கட்டிகட்டியாய் உள்ளது ஏன்? என்று கேட்டார்.

அதற்கு அவன் திருதிருவென்று முழித்தான். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை என்றான்.

அதற்கு அந்தத் துறவி சிரித்துக் கொண்டு, இந்த சாதாரண சாணி, புழுக்கை, விட்டை விஷயமே உனக்குத் தெரியவில்லை. அப்புறம் எப்படி கடவுளைப் பற்றியும், உயர்வான மறை உண்மைகளையும் அறிந்து கொள்ளப் போகின்றாய் என்று கேட்டதும், அவன் வெட்கிப்போய், அந்த இடத்தை விட்டு, தலைகவிழ்ந்து நடந்து போனான்.


என்றுடைய பள்ளித் தோழன் ஒருவன் உண்டு அவன் கடவுள் மறுப்பாளன். நான் இங்கு கூறப்போகும் நிகழ்வு நடந்தது, 1979ம் ஆண்டு. அந்த பள்ளி நாட்களில் ஒருநாள் அவன் ஒருமுறை இதேபோன்று கடவுள் இல்லை. கடவுள் இருக்கிறார் என்று எப்படி சொல்கிறாய் என்று கேட்டான். அவனிடம், இப்படிப்பேச உனக்குக் உரிமை கொடுத்தவரே அவர்தான் என்றேன். அதன்பிறகு, அவனிடம், உனக்கு எந்தப் பாடம் கடினமானது என்று கேட்டேன், அவன் கணக்கும், ஆங்கிலமும் என்று கூறினான். பைக் ஓட்டுவியா? தெரியாது, கார் ஓட்டுவியா? எனக்கு பைக்கே ஓட்டத்தெரியாதுனு சொல்றேன், கார் ஓட்டுவியானு கேட்குற? சரி உடு, ஆங்கிலத்துல, சரளமா பேசுவியா? சத்தியமா என்னால முடியாது. அதுபோகட்டும், நல்லா சுருதி சுத்தமா பாடுவியா? என்று கேட்டேன்...சைமா...அது எனக்கு சுட்டுப்போட்டாக்கூட வரவே வராது என்று சொன்னான்....அதற்கு இப்ப நான் உன்ட கேட்ட எல்லாக் கேள்விக்கும் எனது பதில் தெரியாது, முடியாது என்பதுதான். நானும் உன்னைப்போல்தான்....முதல்ல....இதை எல்லாத்தையும் நாம கத்துக்குவோம்...நாம கத்துக்க வேண்டியது ரொம்ப அதிகம்....அத மொதல்ல கத்துக்குவோம்...கடவுள் என்பதெல்லாம் பெரிய விஷயம்.....அதெல்லாம் தெரிஞ்சுக்க நமக்கு வயசும், பக்குவமும், அறிவும் பத்தாது....கடவுள் என்ற உண்மையை நாம வாழும்போதுதான் அறிந்துகொள்ள முடியும் என்று சமீபத்தில் எங்களுக்குள் நடந்த அந்த விவாதத்தில் இவ்வாறு சொன்னேன்.

புரிந்த கொள்ள விருப்பம் உள்ளவர்கள் சொல்லாமலே புரிந்து கொள்வார்கள். விதாண்ட வாதம் பேசுபவர்களுக்கு எத்தனை விளக்கங்களும் பயனற்றது.

பகைக்க வேண்டும் என்பவர்களை எத்தனைமுறை மன்னித்தாலும், நாம் காட்டும் அன்பும் ஒன்றுக்கும் உதவாது....கடவுளைப் பற்றிய அறிவு, கடவுளின் கொடை....வாழ்வின் அனுபவ ஆழத்திலேதான் அறியப்படும்.......



# விவிலியம் அறிவோம்



## பலவகைச் சட்டங்கள்

இணைச்சட்டம் நூல் 21-25 வரையுள்ள பிரிவுகள் பல்வேறுவிதமானச் சட்டங்களைப் பதிவுசெய்கின்றன. இந்தச் சட்டங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கான சட்டங்களாக உள்ளன. இந்தச் சட்டங்கள் இப்படி நடந்தால் இப்படிச் செய்யவேண்டும் என்ற கட்டமைப்பைக் கொண்டனவாக உள்ளன. இந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது சொத்துரிமை, நீண்ட வாழ்வு, நிலத்தின் வளமை ஆகியவற்றைக் கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றன. எனவே இந்தத் தனிச் சட்டங்களை ஒவ்வொன்றாகச் சிந்திப்போம். இச 21:1-9 வரையுள்ள சொற்றொடர்கள் குற்றமற்றவனின் இரத்தத்தைச் சிந்திய குற்றத்ததைப் பற்றிப் பேசுகிறது. திறந்தவெளியில் ஒருவன் கொலையுண்டு கிடக்க, அவனைக் கொலை செய்தது யாரென்று தெரியாமலிருந்தால் அவன் கிடக்கும் இடத்திற்கு அருகிலுள்ள நகரில் வாழ்பவர்கள் அந்தக் குற்றத்திற்குப் பொறுப்பேற்கவேண்டும் எனக் கூறப்படுகிறது. இத்தியர்களின் சட்டப்படி திறந்தவெளியில் ஒருவன் கொலையுண்டு கிடந்தால், அந்த இடத்திற்கு அருகிலுள்ள நகரத்தில், இறந்தவனின் வாரிசுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட வேண்டும். இச்சட்டம் குற்றமற்றவனின் இரத்தம் சிந்தப்படுவதைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை; மாறாக இறந்தவனின் வாரிசைப் பற்றிக் கவலைப்படுகிறது.

இஸ்ரயேலின் சட்டம் வித்தியாசமானது குற்றமற்றவனின் இரத்தம் சிந்தப்படுவதை அவர்கள் ஏற்கவில்லை. அதைப் பெரிய பாவமாகப் பார்க்கின்றனர். எனவே கொலை செய்யப்பட்ட பிணம் கிடக்கும் இடத்திற்கு அருகிலுள்ள நகரத்தினர் குற்றமற்றவனின் இரத்தத்தைச் சிந்தியவனின் பழியை நீக்குவதற்கு பாவக் கழுவாய் செய்யவேண்டும். அந்நகரின் மூப்பர்கள் ஒன்று கூடி, ஒரு கிடாரியைத் தேர்ந்தெடுத்து, அந்தக் கிடாரியின் கழுத்தை முறிப்பதின் வழியாகவும், அந்தக் கிடாரியின்மீது

கைகளைக் கழுவுவதன் வழியாகவும் அந்தப் பாவத்திற்குப் பாவக்கழுவாய் செய்கின்றனர். இந்தப் பாவக்கழுவாய்ச் சடங்கில் வருகின்ற வேண்டுதல் கவனிக்கத்தக்கது (21:7-8). மூப்பர்கள் பாவமன்னிப்பு பெற வேண்டுகின்றனர். எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தியதுமில்லை, எங்கள் கண்கள் அதைக் கண்டதுமில்லை என அவர்கள் அறிக்கையிடுகின்றனர். பண்டையகால மானுடவியலில் கைகள் கடமையின் அடையாளமாகக் கருதப்பட்டன. எனவே கைகளைக் கழுவுவது குற்றமற்ற நிலையை அறிக்கையிட்டது (காண் மத் 27:24). மேலும் கண்கள் வழியாக ஒளி உடலுக்குள் ஊடுருவுகிறது என்று அவர்கள் அறிந்து கொள்ளப்படவில்லை; மாறாகக் கண்கள் மனிதனுக்குள்ளிலிருந்து வெளியே ஒளியைக் கடத்துவதாகக் கருதப்பட்டது. எனவே பார்வை வாழ்வோரிடமிருந்துதான் வருகிறது. கடவுள் வாழ்பவர்; எனவே அவர் அனைத்தையும் காண்கிறார் (இச 11:12); சிலைகளுக்குக் கண்கள் உண்டு ஆனால் அவை பார்ப்பதில்லை (திபா 115:5; 135:16). மனிதர்கள் கடவுளை முழுமையாகப் பார்ப்பதில்லை (எண் 24:4; எரேமி 5:21). இணைச்சட்டம் நூலில் வருகின்ற கொலைக்கான சட்டங்கள் ஒரு மனிதனின் சாவை தனித்த நிகழ்வாகப் பார்க்கவில்லை மறாக ஒரு சமூகத்தையே பாதிக்கும் சோக நிகழ்வாகப் பார்க்கின்றன.

இச 21:10-14 வரையுள்ள சொற்றொடர்கள் போரில் கவர்ந்து வரப்படும் பெண்களைப்பற்றிப் பேசுகிறது. போரில் ஆண்களையும் பெண்களையும் கைதிகளாகச் சிறைபிடிப்பது எல்லாச் சமூகத்திலும் வழக்கத்தில் இருந்த ஒன்றுதான். பெண் கைதிகள் சில நேரங்களில் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள் (2 அர 5:2-3) ஆனால் சில பெண்களைப் போர்வீரர்கள் தங்கள் மனைவியராகவும் ஆக்கிக்கொண்டார்கள். இணைச்சட்ட விதிகள் போர்க்கைதிகளாக கொண்டுவரப்பட்டு, போர்வீரர்களின் மனைவியராக்கப்படுகின்ற பெண்கள் இஸ்ரயேல் சமூகத்தில் இணைக்கப்படுவதற்கு என்னென்ன செய்யப்படவேண்டும் என்பதைக் கூறுகின்றன. மாற்றத்தைக் குறிப்பிடுவதற்கு தலையை மழித்தல், சிறைக் கைதிக்குரிய உடைகளை மாற்றுதல் மற்றும் பழைய வாழ்வை நினைத்து, குறிப்பாகத் தாய் தந்தையருக்காகத் துக்கம் கொண்டாடுவதற்கு ஒருமாத காலம் ஆகியவை கொடுக்கப்பட்டன. திருமணத்திற்குப்பின் ஏனைய இஸ்ரயேல் பெண்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் அவளுக்கு உண்டு. ஆனால் அவள் துக்கம் கொண்டாடுகிற ஒருமாத காலத்தில் அப்பெண்ணை மனைவியாக்க விரும்பியவன் அவனது நிலையை மாற்றி அவளைத் திருமணம் செய்யவில்லை என்றால் அவளது விருப்பப்படி அவளைப் போக விடவேண்டும். அவளை விற்கவோ, அடிமைபோல் நடத்தவோ கூடாது. இத்தகையச் சட்டங்கள் அசீரியர்கள் நடுவிலும் இருந்தன என்பதை மத்தியகால அசீரியர்களின் சட்டங்கள் அறிக்கையிடுகின்றன.

போர்க் கைதிகளாகக் கொண்டுவரப்படும் பெண்களை

மனைவியராக்கிக்கொள்ளும் வழக்கம் இஸ்ரயேல் மக்களிடையே பல பெண்களைத் திருமணம் செய்யும் பழக்கம் இருந்ததையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. பண்டைய காலத்தில் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட காரணங்களால் ஒருவனுக்கு ஒருத்தி என்ற மரபுதான் பழக்கத்தில் இருந்தது; ஆனால் பல பெண்களை மணம் செய்வதும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்தது. அரசர்கள், பெருந்தனக்காரர்கள் பல பெண்களை மணந்து வாழமுடியும் என்ற சிந்தனை சமூகத்தில் பரவலாக இருந்தது. போர்க்காலத்தில் பெண்களைக் கொள்ளைப் பொருளாகக் கவர்ந்து வருவதும் அவர்களைக் கட்டாயத் திருமணம் செய்வதும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல பெண்களை ஒருவன் திருமணம் செய்வதற்கு இன்னும் பல காரணங்கள் கூறப்பட்டன. உதாரணமாக, முதல் மனைவிக்குக் குழந்தைகள் இல்லாமல் இருத்தல், மருத்துவ வசதிகள் இல்லாததால் குழந்தை பிறக்கும்போது பெண்களின் சாவு, போரில் ஆண்களின் இறப்பு போன்றவற்றைக் கூறலாம். போர்க் கைதியாகக் கொண்டுவரப்பட்ட பெண், ஒருவனுக்கு மனைவியாகி, இஸ்ரயேல் சமூகத்தோடு இணைக்கப்படுவது அவளுக்குக் கிடைக்கும் விடுதலையாகவும் பார்க்கப்படுகிறது (இச 21:14). போரினால் மனிதர்கள் பாதிக்கப்படுவது பல விதங்களில் இன்றும் நடைபெறுகிறது. அந்தந்தக் காலச் சூழ்நிலைக்கேற்ப மனிதநேயத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதற்கு பல சட்டங்களும் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

இச 21:15-17 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் தலைச்சன் மகன் அல்லது தலைப்பேறுகள் பற்றிப் பேசுகிறது. பண்டைய காலத்தில் சொத்துரிமைகள் தலைமகன் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பிரிக்கப்பட்டன. தலைமகன் தகப்பனின் சொத்தில் இரண்டில் ஒரு பங்கைப் பெறுவதற்கு உரிமையுள்ளவன். பண்டைய மேற்காசிய நாடுகள் முழுவதும் தலைமகன் சட்டம் வழக்கத்தில் இருந்தது. விவிலியத்திலும் தலைமகன் அல்லது தலையீற்றுகள் ஒரு முக்கியக் கருத்தாகப் பேசப்படுகிறது. இச்சட்டத்தின் நோக்கம் என்னவென்றால் குடும்பச் சொத்து ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குச் சுமூகமாகக் கடத்தப்படவேண்டும் என்பதுதான். நிலத்தில் விளைகின்ற முதல்கனிகள் கடவுளுக்கு உரியவை. அதைப்போல தலைப்பேறுகளும் கடவுளுக்குரியவை. எகிப்தின் தலைப்பேறுகளைக் கொன்றபோது கடவுள் இஸ்ரயேல் மக்களின் தலைப்பேறுகளைக் காப்பாற்றினார் (விப 12:29-30; 13:2, 12-16). இஸ்ரயேல் மக்களே கடவுளின் தலைப்பிள்ளையாகக் கருதப்படுகின்றனர் (விப 4:22; காண் மத் 1:25). எனவே தலைமகன் அவன் எந்த மனைவிக்குப் பிறக்கிறான் என்பதில் விவாதமில்லை. அவன் தந்தையால் விரும்பப்பட்டாலும், விரும்பப்படாவிட்டாலும் தலைமகனுக்குரிய உரிமைகளைப் பெறுவான் பெற்றோரின் விருப்பமோ, சகோதரர்களுக்குள் எழுகின்ற போட்டிகளோ தலைமகனுக்குரிய உரிமையைப் பறிக்கமுடியாது.

இச 21:18-21 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் அடங்காப்பிடாரியாக, முரட்டுத்தனமாக வாழுகின்ற ஒருமகனைப்பற்றிக் கூறுகிறது. குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டு, ஒரு மகன் பெற்றோருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்காமல், அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் இருந்தால் அது சமூகத்தையும் பாதிக்கும். இந்த இறைச்சொற்றொடர்களை ஆழமாகச் சிந்தித்தால் முரட்டுத் தனத்துடன் செயல்படுகின்ற அந்த மகனின் செயல்கள் உடன்படிக்கை விதிகளுக்கு எதிராகச் செயல்படுவதாகவும் பார்க்கப்படுகிறது. உதாரணமாக, அவன் பெருந்தீனிக்காரனும் குடிவெறியனுமாய் இருக்கிறான் என்ற சொற்றொடர் மகன் திருத்தப்பட முடியாதவனாக இருக்கிறான் என்பதைக் காட்டுவதாக உள்ளது. அவனுடைய குற்றம் வேற்று தெய்வங்களை வழிபட்டு, உடன்படிக்கைக்கு எதிராகச் செயல்படுகின்ற குற்றத்திற்கு இணையானதாகக் கருதப்படுகிறது. எனவேதான் பெற்றோரின் சாட்சியத்துடன் அவன் கொல்லப்பட வேண்டியவனாகக் கருதப்படுகிறான். இந்தச் சட்டம் இன்றைய சமூகத்தில் மிகவும் கொடூரமானதாகத் தெரியலாம். ஆனால் இந்தச் சட்டத்தின் நோக்கம் சமூகத்தில் சட்ட ஒழுங்குகள் இருக்கவேண்டும் என்பதுதான். அடங்காப்பிடாரிகளாக வாழும் பிள்ளைகள் குடும்பத்திற்கு மட்டுமல்ல வாழும் சமூகத்திற்கே கெட்ட பெயரைச் சம்பாதிக்கிறார்கள். எனவேதான் அத்தகையப் பிள்ளைகளை அழித்தொழிப்பதில் சமூகமும் ஈடுபடுகிறது. நகரவாயிலில் அமர்ந்திருக்கும் தலைவர்களும் இதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். நகர்வாயிலில் அமர்ந்திருக்கும் தலைவர்கள் அந்நகரின் நீதிபதிகளாகச் செயல்படுபவர்கள். குற்றவாளி ஒருவனை நகர்வாயிலுக்குக் கொண்டு வருகையில் அவன் திருந்தி வாழ்வதற்கும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அப்படி அவன் திருந்தி வாழ விரும்பவில்லை என்றால் அவனுக்கு கொலைத்தண்டனை வழங்கப்படுகிறது. கொலைத்தண்டனை கல்லால் எறிந்து கொல்வதின் வழியாக நிறைவேற்றப்படுகிறது. கல்லால் எறிந்து கொல்வதில் நகரத்தார் அனைவரும் ஈடுபடுகின்றனர். தீமைகளை ஒழிப்பதில் அனைவருக்கும் பங்கு உண்டு என்பதைக் காட்டுவதாக இது உள்ளது. குடும்பத்திற்கு எதிராகவோ சமூகத்திற்கு எதிராகவோ ஒருவன் குற்றம் செய்தால் அந்தச் சமூகமே இணைந்து அவனுக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்பதைக் காட்டுவதாக இச்சட்டம் உள்ளது.


இச 21:22-23 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் மரத்தில் தொங்கவிடுபவனைப்பற்றிப் பேசுகின்றன. இஸ்ரயேல் மக்கள் நடுவில் ஒருவனைத் தூக்கிலிடுவது வழக்கத்தில் இல்லை. எனவே இச்சட்டம் தூக்குத் தண்டனைபற்றிக் கூறவில்லை. மாறாக ஒருவன் கல்லால் எறியப்பட்டோ, அல்லது வாளால் வெட்டப்பட்டோ கொலை செய்யப்பட்டபின் அடுத்தவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதற்காக மக்கள் கூடும் இடங்களில் மரத்தில் தொங்கவிடும் பழக்கம் இருந்தது.

அவ்வாறு தொங்கவிடப்படும் பிணங்களை இருட்டுவதற்குமுன் இறக்கிவிடவேண்டும். இஸ்ரயேலின் சட்டப்படி ஒரு பிணத்தைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் புதைக்கவேண்டும். போர் நடக்கும் வேளையில்கூட இறந்தவர்களைப் புதைக்க வேண்டும். இறந்தவரைப் புதைக்காமல் விடுவதும், புதைக்கப்பட்டவர்களின் கல்லறையை இடிப்பதும் அருவருப்பான செயலாகப் பார்க்கப்பட்டது (தோபி 1:17-18; 4:3-4). ஆகாபு அரசனின் மனைவியான ஈசபேலின் கொடூரமான கொலை ஓர் அருவருப்பான செயலாகப் பார்க்கப்பட்டது (2 அர 9:30-37). அவள் அவமானப்படுத்தப்பட்டாள். அவளுடைய பெயர் நிலத்திலிருந்து அழிக்கப்பட்டது.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf






அருட்சகோ.ஜெஸிந்தா ஜான்சன்.கா.ச
புனித.அலோசியஸ் மேல்நிலைப்பள்ளி, தாராபுரம்

# திருவருகைக்காலம் 3ம் வாரம் ஞாயிறு - 17.12.2023

## எசாயா 61/1-2,10,11, 1 தெசலோனிக்கர் 5/16-24, யோவான் 1/6-8, 19-28

என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்றான் ஓர் அரசன், ஞானியிடம். 'உன் கடமையை நீ சரியாக செய்கிறாயா? என்று ஞானி கேட்டார். என் நாட்டிற்கு அன்னியர் பகை இல்லை. கள்வர் பயம் இல்லை. அதிக வரிகள் விதிப்பதில்லை. முறையாக நீதி செலுத்தப்படுகிறது. நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்கின்றனர். ஆனால் என் மனதில் மட்டும் அமைதி இல்லை. இந்த அரச பதவியில் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை' என்றான். அப்படியானால் ஒன்று செய். உன் நாட்டை என்னிடம் கொடுத்துவிடு என்றார். எடுத்துக்கொள்ளுங்கள் 'என்றான் மன்னன். 'நீ என்ன செய்வாய் என்றார் ஞானி. 'நான் எங்காவது போய் வேலை செய்து பிழைத்துக் கொள்கிறேன் என்றான் அரசன். எங்கோ போய் தெரியாத வேலை செய்வதைவிட, என்னிடமே வேலை செய். என் பிரதிநிதியாக மட்டும் நாட்டை ஆண்டு வா. நான் பிறகு வந்து கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொள்கிறேன் என்றார். 'சரி' என்றான் மன்னன். ஒரு ஆண்டு கழித்தபின் ஞானி அரசனைக் காண வந்தார். அரசன் இப்போது மகிழ்ச்சியாக காணப்பட்டான். 'நான'; என்ற எண்ணம் வரும்போது துயரம் சூழ்ந்து விடுகின்றது. 'எதுவும் எனதல்ல 'எனக்கு கொடுக்கப்பட்டது என எண்ணும்போது துன்பங்கள் ஓடிவிடும் என்றார் ஞானி.

நான் 'நான்' என்னும் அகந்தை மனிதனை அழித்துவிடும். உலகில் உயர்ந்த காரியங்கள் செய்த மேதைகள் பலர் பகட்டுகளையும் பெருமை பாராட்டுகளையும் விரும்பாமல் அஸ்திவார கற்களாய் தங்களை மறைத்து வாழ்ந்தனர்: வாழ்கின்றனர். ஆனால் மக்கள் நலனைப் பேணாமல் அவர்களை

நசுக்கிப் பிழிந்து, ஒடுக்கி, உரிமைகளைப் பிடுங்கி, தன் பேரில் சொத்து சேர்ப்பவர்கள்,'மக்கள் தலைவர்கள் நாங்கள் என வீண் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனர். இவர்களுக்கு சவுக்கடி கொடுக்கும் விதமாக இன்றைய நற்செய்தி உள்ளது.

சான்று பகர: மெசியாவை எதிர்பார்த்துக் காத்திருந்த மக்கள், புனித ஸ்நாபக அருளப்பரைப் பார்த்ததும் நீர் தான் மெசியாவோ? எனக் கேட்க அவர் இல்லை நான் அவருக்கு சான்றுபகர வந்தவன் தான்' என்று தெளிவுபடுத்துகிறார்.

1. அவர் சான்றுபகருமாறுவந்தார் (யோ 1:7)

2. அவர் ஒளிஅல்ல மாறாக ஒளியைக் குறித்துச் சான்றுபகரவந்தவர். (யோ 1:8)

3. எனக்குப் பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர். (யோ 1:15)

4. நான் மெசியாஅல்ல. (யோ 1:19)



5. நீர் எலியாவா? நானல்ல. நீர் தாம் வரவேண்டிய இறைவாக்கினரா? நானல்ல (யோ 1:21)

6. அவருடைய மிதியடிவாரை அவிழ்க்க எனக்குத் தகுதியில்லைஎன்றார். (யோ 1:29)

என்னிலும் முன்னிடம் பெற்றவர்: மெசியாவுக்குச் சான்றுபகர வந்தவன் நான் என்றதோடு நில்லாமல் அவர் என்னைவிட சிறந்தவர் எனக் கூறித் தன்னைத் தாழ்த்துகிறார். அந்த தாழ்ச்சியை நேசிக்கும் இறைவன் மனிதராய்ப் பிறந்தவர்களுள் யோவானைவிடப் பெரியவர் ஒருவருமில்லை லூக் 7:28 என்ற பாராட்டைக் கொடுக்கின்றார். தன்னைத்தானே தாழ்த்துவோர் உயர்த்தப்படுவர். தன்னை உயர்த்துவோரின் நிலை உயாந்த இடத்தில் இருந்து பள்ளத்தில் பாய்ந்தவனின் நிலையைப் போன்றது.

நான் தகுதியற்றவன்: கதையில் வரும் அரசனைப் போல் நான் என்ற எண்ணம் நீங்கி'எல்லாம் கொடுக்கப்பட்டது என்ற மனநிலையில் நிம்மதி அடைந்ததுபோல், நாம் ஏதோ இம்மண்ணுலகிலேயே இருந்துவிடுவோம் என்பதுபோல் திட்டமிடாமல், சிறிது காலம் இங்கே இருக்கிறோம்.

இது மறுவுலகுக்கான பயணம் என்பதை நினைவில் நிறுத்தி செயல்படுவோம். உயர்வடைவோம்.




# திருவருகை காலம் மூன்றாம் ஞாயிறு

எசா. 61 : 1–2, 10–11 1தெச. 5 : 16–24
யோவா. 1 : 6–8, 19–28

**17-12-2023**




பா. சேவியர்
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

மகிழ்ச்சி என்னும் திருவிளக்கேற்றி, ஒளியின் கடவுளாகிய இயேசுவுக்குச் சான்று பகர வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் திருவருகை காலம் மூன்றாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துதான் உலகின் ஒளி, அவரே ஒப்பற்ற கடவுள் என்பதற்குச் சான்று பகர்ந்து, அதை விசுவாசத்துடன் அறிக்கையிட இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கவும், எல்லாச் சூழ்நிலையிலும் இடைவிடாது மன்றாடவும், திருமுழுக்கு யோவானைப்போல் உண்மைக்கும் இயேசுவுக்கும் சான்று பகர்ந்து வாழவும், நிறைவுடன் செயல்படவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இன்றைய வாசகங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான அழைப்பை நம்முன் வைப்பதோடு, அதைப் பெறுவதற்கான வழியையும் காட்டுகின்றன. கடவுள்தான் மகிழ்ச்சியின் ஊற்று. அவர் நம்மோடு இருக்கும்போது மட்டுமே நாம் எதை இழந்தாலும் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பதையும் வலியுறுத்துகின்றன.

நாம் ஒவ்வொருவரும் ஆண்டவரின் வழியை ஆயத்தம் செய்ய அனுப்பப்பட்ட முன்னோடிகள் என்ற உணர்வோடு இறைவேண்டலில் நிலைத்திருக்கவும், நன்றி சொல்லவும், இருளைக் கடந்து உன்னத ஒளியில் பயணம் செய்யவும் இத்திருப்பலி வழியே இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

எல்லா மக்களும் கடவுளின் மன்னிப்பைப் பெற்று மகிழ, ஆண்டவர் அருள் தரும் ஆண்டை அறிவிப்பார் என்ற நற்செய்தியைச் சுமந்து வருகிறது இன்றைய முதல் வாசகம். கடவுள் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவார், நம் உள்ளம் பூரிப்படையும் என்ற நம்பிக்கையைத் தரும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

புனித பவுலடியார் தெசலோனிக்கருக்கு எழுதிய திருமுகத்தின் வழியாக பொருள்மிக்க அறிவுரைகளை நமக்கு வழங்குகிறார். இயேசுக்கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நாம் நமது உள்ளத்தையும் ஆன்மாவையும் உடலையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வலியுறுத்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அருள் தரும் ஆண்டினை வழங்கிய அன்பின் இறைவா, உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், பாவச் சிறையில் வாடுவோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும் உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் ஒவ்வொருவரும் உம் மகிமையையும் பெருமையையும் விளங்கச் செய்வதற்காக உம்மால் உருவாக்கப்பட்ட ஒரு கருவி என்ற மனப்பான்மையோடு செயல்படத் தேவையான ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) அமைதியை அருளுகின்ற அன்பு இறைவா, எப்போதும் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கவும், எல்லாச் சூழ்நிலையிலும் உமக்கு நன்றி கூறி மகிழவும், அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து தீமைகளை விலக்கி வைத்து நல்லவற்றை மட்டும் பற்றிக் கொண்டு, உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தையும் பழுதின்றி காத்து உமக்கேற்ற மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) விடுதலை என்னும் உடைகளை எமக்கு உடுத்தி, நேர்மை என்னும் மேலாடையை அணிவிப்பவருமான அன்பு இறைவா, உம்மில் இணைந்து நாங்கள் பெருமகிழ்ச்சி அடையவும், எம் உள்ளம் என்றும் உம்மைப் போற்றிப் பூரிப்படையவும், உம் திருமகன் இயேசுவுக்குச் சான்று பகர்ந்து பேருவகை கொள்ளவும், இருப்பது போதுமென்ற மன நிறைவுதான் உண்மையான மகிழ்ச்சி என்பதைப் புரிந்து வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) இரக்கத்தின் ஊற்றே இறைவா, இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டு உணவின்றி உடையின்றி உறைவிடமின்றித் தவிக்கும் அனைவருக்காகவும் உம் பேரருளை நாடுகிறோம். அனைத்தையும் இழந்து வாடும் அவர்களுக்கு நீர்தாமே ஆசியளித்து ஆறுதல் தந்து வழி நடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். அவர்கள் மீண்டு வர எங்களால் இயன்ற உதவிகளைத் தயக்கமின்றி செய்யும் நல்ல மனதினை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

பிள்ளைகளின் தவறுகளை நியாயப்படுத்தும் பெற்றோர்கள்
பின்னாளில் அவர்களின் குற்றங்களை மறைக்க வக்கீல்களை நியமிக்க வேண்டிவரும்

பலன் கொடுக்கும்வரை, உங்களின் முன்னேற்ற முயற்சிகளை மறைக்க வேண்டும்

ஏமாற்றங்களைத் தாங்கிக் கொள்ள மனதிற்குக் கற்றுக் கொடுங்கள்
அதற்கான மந்திரம்–இவ்வுலகில் எதுவும் நிரந்தரமல்ல என்பதுதான்

இடைவிடாத முன்னேற்ற முயற்சி வெற்றியின் வேகத்தைத் துரிதப்படுத்தும்

நமக்குப் பிடிச்சமாதிரி நாமே இல்லாதபோது,
நமக்குப் புடிச்சமாதிரி அடுத்தவங்க இருக்கணும் என எதிர்பார்ப்பது
கடைந்தெடுத்த அறியாமையாகும்

உங்களிடம் இருக்கும் ஒரே கருவி சுத்தியல் என்றால்,
நீங்கள் பார்க்கும் பொருட்கள் எல்லாம் ஆணியாகவே தோன்றும்.

கவலை, ஒரு மகா திருடன், ஒட்டி உறவாடும் சதிகாரன்
அது ஒருவரின் நேரம், ஆரோக்கியம், மகிழ்ச்சி, முன்னேற்றம் அனைத்தையும் திருடுவதோடு
ஒரு வேலையையும் செய்யவிடாமல், கவலைப்படுவதில் சுறுசுறுப்பாய் வைத்திருக்கும்.

வலிமையானவர்களே மன்னிக்க முடியும்

எதிரியாக நிற்கப் பயந்தவனே, நம்பிக்கைத் துரோகியாகிறான்.

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

# தேம்பாவணி

வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி நம் விவிலியத்தில் வருகின்ற பல நிகழ்ச்சிகளை உள்ளடக்கியது. அவை 150க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளன. அதே நேரத்தில் விவிலியத்தில் காணப்படாத பல செய்திகளையும் தேம்பாவணி கொண்டுள்ளது. அச்செய்திகள் பலவற்றையும் வீரமாமுனிவர் அகிர்த்த மரியாவின் நூலில் இருந்து பெற்றார்.

எடுத்துக்காட்டாக யோசேப்பு துறவறம் புகச்சென்றபோது கடவுள் அருளால் மனம் மாறி இல்லறத்திலேயே துறவியாக வாழ முடிவு செய்து எருசலேம் கோவில் செல்வதும், அங்கு ஏற்கனவே கன்னியாக அர்ப்பணிக்கப்பட்டு வாழ்ந்த மரியா திருமணம் செய்ய முன்வந்தபோது அங்கே வரிசையாய் நின்று கொண்டிருந்த ஆடவர்களுள் யோசேப்பு கையில் பிடித்திருந்த கோல் அதிசயமாக துளிர்விட்டு லீலி பூக்களால் நிறைந்ததும், அதையே கடவுள் தான் யாரை மணக்க வேண்டும் என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார் என்று மரியா விளக்கம் பெற்று யோசேப்பை மணப்பதையும் குறிப்பிடலாம்.



திறல் ஆர் திருநீரிய தீம் கொடியைப்
பெறல் ஆக எனக்கு ஒரு பேறு உளதோ
துறவாய் மணம் நீக்குப சொல்லிய பின்
உரல் ஆம் மனமோ என உள்ளினன் ஆல்
(பாடல் எண் 397)

பொருள்:

வல்லமை பொருந்திய வானுலகச் செல்வம் போன்ற இனிய மலர்கொடியாக்கிய மரியாவை மனைவியாக பெறத்தக்க ஒரு பேறு எனக்கு உண்டோ? மேலும் துறவு மேற்கொண்டு திருமணத்தை விலக்கி வாழ்வதாக வாக்குறுதி சொல்லியபின் மணம் புரிந்து கொள்ளுதல் தகுமோ என்றெல்லாம் யோசேப்பு எண்ணினார்.

உள்ளும் பொழுதே இவன் ஓங்கிய கோல்
கள்ளும் கடியும் பொழி காமர் இதழ்
விள்ளும் செழு வெண்மலர் பூத்தமையால்
மள்ளும் விரை ஆலயம் மல்கியதே
(பாடல் எண் 393).

பொருள்:

துறவறம் கடைபிடிக்க எண்ணிய யோசேப்பு கடவுளின் திட்டப்படி மரியாவை மணக்க வேண்டிய நிலைபற்றி எண்ணத்தில் ஆழ்ந்திருந்த பொழுதே அவர் உயர்த்திப் பிடித்திருந்த கோளில் தேனும் மணமும் பொழியும் அழகிய இதழ் விரியும் செழுமையான வெண்ணிற லீலி மலர்கள் பூத்தமையால் பரவுகின்ற வாசனை எருசலேம் கோவில் முழுவதும் நிறைந்தது.

கம்பா அணி காட்டிய கன்னி நலத்து
ஓம்பா அணி இவ் வணி ஓர்ந்த பிரான்
நாம்ப அணி நம்பியை நல்கிட
ஓர் தேம்பா அணி ஆம் கொடி சேர்த்தன் என்றார்.
(பாடல் எண் 399)

பொருள்:

மெலியாத அழகைத் தன்னகத்தே கொண்டு நின்ற கன்னி மரியாவின் நன்மைக்கு இவ்வுலக அழகெல்லாம் வேண்டாத அழகு என்று உணர்ந்த ஆண்டவன், கெடாத அழகுடைய ஆண்களில் சிறந்தவனாகிய யோசேப்பையே ஓர் அழகாகச் சேர்த்துக் கொடுக்கும் அறிகுறியாக ஒரு வாடாத மாலை போன்ற இம்மலர் கொடியை அவனுக்கு தந்தான் என்று அனைவரும் கூறினர்.

தேன் போன்ற இனிய பாடல்களின் தொடர்மாலை மீண்டும் மலரும்..
இயேசுவுக்கே மகிமை
லீமா விக்டோரியா
தமிழாசிரியை.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 74

அன்பீனும் ஆர்வம் உடைமைஅதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு



### குறள் விளக்கம்

அன்புபிறரிடம் விருப்பம் உடையவராகவாழும் தன்மையைத் தரும். அது எல்லாரிடத்திலும் நட்புஎன்றுசொல்லப்படும் அளவற்றசிறப்பைத்தரும்.

### சிந்தனை

கோவிலில் தீர்த்தம் கொடுக்கப்பட்டது. உள்ளங்கைகளில் பத்திரமாக வாங்கின நண்பனிடம் உடன் வந்தவன் சொன்னான், நீ எச்சரிக்கையாய் மிச்சத்தை வாங்கிக் கண்களில் ஒற்றி, இதழ்களில் ஊற்றி, மிச்சத்தைத் தலையிலும் தெளிப்பாய் கொஞ்சம் அலட்சியமாய் இருந்தால்கூட சிந்திவிடும். பத்திரமாய் பாதுகாப்பதாக நினைத்து கைகளில் இறுக்க மூடினாலோ விரல் வழியாக வழிந்துவிடும். இந்தத் தீர்த்தம் போலவே உறவுகளும் மிகப் புனிதமானவை, அலட்சியம் காட்டினாலும் அதிகமாகப் பிடித்துவைக்க முயன்றாலும் அவற்றை இழந்துவிடுவாய் உறவுகளின் பெருமையை உணர்ந்தான் நண்பன்.

மரம் பழுத்தால் வெளவாலை வா என்று அழைப்பதில்லை. பறவைகள் தானாகவே வந்து அந்த மரத்தைச் சேருகிறது. அதுபோல் ஒருவரிடம் அன்பு இருக்குமே என்றால் உறவும் நட்பும் தானாகவே வந்துவிடும் என்கிறார் வள்ளுவர். அன்புக்கு ஈர்ப்புவிசை உண்டு. தன்னைப் போன்ற நற்பண்புடையோரை அது தானாகவே ஒன்றிணைக்கும் தன்மையுடையது. அன்புடையவர் என்றும் தனித்திருப்பதில்லை, தனிமையிலும் இருப்பதில்லை. அவரைச் சுற்றி எப்போதும் அன்புடையவர் கூட்டம் இருந்துகொண்டேதான் இருக்கும்.

மனிதர் செய்யும் தருமங்கள் அவருக்கு கணையாழிபோல் திகழ்கின்றன: அவர்கள் புரியும் அன்புச் செயல்கள் அவருக்குக் கண்மணி போல் விளங்குகின்றன. சீ.ஞா 17:22. அன்பு அரவணைக்கும் ஆற்றல் கொண்டது. எனவே அன்புடையோரைச் சுற்றி அவரால் அன்பு செய்யப்படுபவர்கள், அவரை அன்பு செய்பவர்கள் என ஒரு வட்டம் இருந்துகொண்டேதான் இருக்கும். இந்த அன்பு வளையம் உறவுகளின் பெருமையை இந்த உலகிற்கு உணர்த்துவதாக இருக்கும்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm